# கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்

## சாமிஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்

## சாமிஜி

விற்பனை உரிமை
சூரிய காந்தி
138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-222 2365

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்.**

முதற்பதிப்பு : ஆனி 2005

எழுதியவர் : சு. குமாரசாமி.B.Sc, Dip in Ed.

© : உரிமை பதிவு

வெளியீடு : சைவ சித்தாந்த தமிழ் நிலையம்,

68/1 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

Title : KOIL POOSAIKAL THAMILAKA VENDUM.

First Edition : June 2005.

Author : S.Kumarasamy.B.Sc, Dip in Ed.

Publisher : Saiva Siddhantha Tamil Center.

68/1 Rasavinthoddam, Jaffna.

| | | |
|---|---|---|
| Price | : Sri Lanka | Rs.80/= |
| | India | Indian Rs.80/= |
| | Other Countries | US $15/= |

Printer : Thiruvallurar Press,

593, Point Pedro Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

1999 ஐப்பசியில் "இது இந்துமதம்" என்ற பெயரில் ஒரு நூல் எழுதியிருந்தேன். கொழும்பு " அரவிந்தன் பதிப்பகம்" அந்த நூலை வெளியிட்டிருந்தது.

விற்பனையில் சாதனை செய்த புத்தகம் அது.

அறிஞர்கள் பலரும் அந்த நூலை நன்கு பாராட்டியிருந்தார்கள்.

சமூகப் பொறுப்புணர்வுடன் நிறைய எழுதி வருபவரும் இளைப்பாறிய கல்விப் பணிப்பாளரும் தேசிய கல்வி நிறுவனத்தின் ஆலோசகருமான திரு. கு. சோமசுந்தரம் அந்நூலுக்கு அருமையானதொரு அணிந்துரை வழங்கியிருந்தார்.

> "சாமிஜி தமது தெளிவான கருத்துக்களை துல்லியமாக இந்நூலில் வெளிப்படுத்துகிறார்."
>
> "யாவரும் வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடிய எளிய இனிய தமிழ் நடையைக் கையாண்டிருப்பது நூலின் மற்றொரு சிறப்பாகும்"
>
> "இந்நூல் வாசகரில் ஓர் உள்ளக் கிளர்வினை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்"

-என்று பலவாறு அணிந்துரையில் சிறப்பித்துக் கூறியிருந்தார்.

வானொலியில் நூலை விமரிசனம் செய்த சப்பிரமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் வாகீச கலாநிதி திரு. கனகசபாபதி நாகேசுவரன் -

> "சிந்தனையாளர் சாமிஜி விஞ்ஞான நோக்கு நிலைநின்று நூலை எழுதியுள்ளார்."
>
> "எக்கருத்துக்களாயினும் அறிவுக் கண்ணோட்டத்துடன் சீர்தூக்கி ஆராயும் சாமிஜியின் எழுத்துத்திறன் நுட்பம் மிகுந்தது. சிறிய சிறிய வாக்கியங்களிலே தமது கருத்துக்களைப் பிறர் இலகுவிலே கிரகிக்கத்தக்க முறையிலே எழுதியுள்ளார்."
>
> "மெய்ப்பொருள் காணும் வேட்கை இவரது இருதய வேட்கையாயுள்ளது"

- என்று நிறைய கூறியிருந்தார்.

பத்திரிகையில் நூலை விமரிசனம் செய்த முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. கோ.சி.வேலாயுதம்-

> "சாமிஜி பலநூல்கள் நுவன்ற பாக்கியசாலி. வாசிப்பதனால் புரணத்துவம் அடைந்த பேராளன்."
>
> "சொல்லிலே தெளிவு. கருத்திலே ஆழம், வசன நடையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கு தடையில்லாக் கோலம்."
"விஞ்ஞானப் பட்டதாரி என்பதாலோ என்னவோ பகுத்தறிவுக்கு ஓவ்வாத கருத்துக்களைச் செகுத்து உரிய கருத்துக்களைத் தொகுத்துத் தருவதில் ஒழுங்கும் ஓட்டமும் நிறைந்திருக்கக் காண்கின்றோம்."
"சமூக எழுச்சிக்கு வித்திடும் நூல்"
- என்று கூறியிருந்தார்.

பத்திரிகைகளில் நூலை விமரிசனம் செய்த "மூதறிஞர் சொக்கன்"-
"சைவத்தின் மேன்மையும் அதன் வரைவிலக்கணமும் சிந்னையைத் தூண்டுவனவாயுள்ளன"
"சிந்தனையைத் தூண்டி மெய்சிலிர்க்க வைத்து செயலுந்தலுக்கு வழிவகுப்பதாகிய உணர்வினைத் தூண்டுகிறது"
"சாமிஜியின் சிந்தனை வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வீறார்ந்த உரைநடை நூலை ஒரே மூச்சில் படித்து முடிக்கத் தூண்டுகிறது"
- என்றெல்லாம் நிறைய எழுதியிருந்தார்.

பலர் நேரிலும் கடிதமூலமும் தங்கள் பாராட்டுதலைப் தெரிவித்திருந்தார்கள்.

எல்லாருக்கும் எனது நன்றிகள்!

'த ஐலண்ட்' (04.05.2005) ஆங்கில நாளிதழில் அப்புத்தகத்தைப் தடை செய்ய வேண்டுமென்று கட்டம் போட்டு முக்கியத்துவம் கொடுத்து பெட்டிச் செய்தியும் வெளியிட்டிருந்தார்கள்.

நூலைத் தடைசெய்ய வேண்டுமென்று ஜனாதிபதிக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டு இருந்தன!

"இது இந்துமதம்" என்ற எனது முந்தைய நூலின் தொடர்ச்சியாகவே இப்போது வெளிவரும் " கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்" என்ற இந்த நூலைக் கருத வேண்டும்.

"நூலை எழுதுங்கள் எழுதுங்கள்" என்று அடிக்கடி என்னை நெருக்கி உற்சாகப் படுத்திய இளைப்பாறிய கல்வி அதிகாரி திரு.க. மகேசன் அவர்களுக்கும்,

அழகுற அச்சிட்டுத் தந்த 'திருவள்ளுவர் அச்சக' உரிமையாளர் திரு.சொ.விமலன் அவர்களுக்கும், கணனி வேலைகளைச் செப்பமாகச் செய்த செல்வி.செ.நித்தியகலா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

138, ராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
15 ஆனி 2005

சாமிஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்!

உலகமெலாம் பரந்து
நாற்றுப் பயிராக
நிற்கின்ற நந்தமிழைக்
காத்து வளர்த்துக்
கருத்தோடு போற்றி
கற்றவர் களிகூர
ஊற்றுப் பெருக்காக்கி
உண்ணத் திகட்டாத
தித்திக்கும் தேனாக
உலகமெலாம் உலவவிட
நல்லவழி ஏதேனும்
நம்மிடையே இருக்கிறதா?
செய்தற்கு அரியது
செய்வார் பெரியர்!
செய்தற்கு உரியது
செய்வார் அறிவுடையார்!
செய்தற்குஉரியது தெரிந்தும்
செய்யாதுஇருப்பார் கயவர்!
செய்தற்குஉரியது தெரிந்தும்
செய்தற்குஉரிய காலத்துஅது
செய்யாது -
தயங்கியும் மயங்கியும்
பயந்தும் பதுங்கியும்
இருப்பாரைத் திருத்த
வழியேதும் இருக்கிறதா?
உள்ளம் குழைக்கும்
உயர்வான தமிழும்
குழைந்த உள்ளத்தில்
தெள்ளத்தெளியச் சிவம்காட்டி
நம்மையேபின் சிவமாக்கும்
செம்மைநிறை சைவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதுமே
பரந்துஉயர்ந்து நிலைத்துநின்று
புகழ்பரப்ப வேண்டுமென்ற
நலம்மிகுந்த பெருவிருப்பம்
நமக்கு இருக்கிறதா?

விரிந்த மனம்கொண்டு
விரதமாய்க் கருக்கொண்டு
விரைந்துநாம் செய்தற்குரிய
சூர சங்காரமாய்
செய்தே தீரவேண்டிய
தவமான செயல்என்ன?

உலகம் முழுவதுமே
தேமதுரத் தமிழோசை
நின்று நிலைக்கவும்
மேன்மைகொள் சைவநீதி
சீருடன் விளங்கவும்
பழுதே இல்லாத
பக்குவமான வழிஉண்டு!

தலைநிறைந்த புத்தியுள்ள
அந்நியத்தை எதிர்ப்பதிலே
எந்நாளும் முந்திநிற்கும்
தலைவணங்காப் பெருமைமிக்க
யாருக்கும் தாழாத
நமதுநல்ல யாழ்ப்பாணம்
கண்விழித்துத் தலைநிமிர்ந்தால்
உலகம் முழுவதுமே
அமிழ்தான தமிழும்சைவமும்
பெருமையுடன் தலைநிமிர்ந்து
நெடுங்காலம் நிலைக்கும்நிலை
எளிதாக உருவாகும்!

நின்று நிதானித்து
நன்கு சிந்தித்து
செயலாற்றும் விருப்போடு
தொடர்ந்து படியுங்கள்! -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சிவாயநம

# கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்

**கேட்கும் தமிழோசை**
**அடுத்த சந்ததிக்கு**
**அப்புறமும் கேட்குமா?**

உலகமெலாம் பரந்து
நாற்றுப் பயிராக
நமதுதமிழ் நிற்கிறது!
ஈழத்திலே தமிழ்கேட்டு
உரிமையுடன் போராட
உணர்வுகண்டு மனம்மகிழ்ந்து-
உலகம் முழுவதுமே தமிழ்பரவ
அருள்புரிந்து தெய்வம் வழிகாட்ட
கடைகெட்ட பூசாரி
இடைநின்று தடையானால் -
தடையுடைத்துத் தமிழ்காத்து
தமிழ்நெறிஅறியாப் பூசாரிக்கு
அடியோடு விடைகொடுத்து -
கடனறிந்து தலைநிமிர்ந்து
தலைத்தந்து தலைமுறைத்
தத்துவமாய் கருமத்தான்
தண்ணார் தமிழ்வளர்த்தல்
தன்மானத் தமிழர்கடன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்குண்டு கலைந்து
அலைந்து களைத்து
புலம்பெயர்ந்த நமதுஉறவுகள் -
நிலைத்து உலைவைத்து
தொலைந்த நிம்மதியைத்
தேடிச் சுகம்பெற்று
மெல்லத் தலைநிமிரும்
நல்ல இடங்களாக-
உலகிலே பலநாடுகள்
இனிய முகம்காட்டி
இருந்துவருவது இனமான
நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி!
ஒருவர் இருவராக
தெரிந்துசிலர் கூட்டாக
குடும்பம் முழுவதுமாய்
ஊரே ஒரேயடியாய்-
மொழியும் புரியாமல்
வழியும் தெரியாமல்
வருவதும் அறியாமல்
சென்ற உறவுகள்-
பலபத்து ஆயிரங்கள்
லட்சங்கள் என்பதாய்
உலகம் முழுவதுமே
பரந்து நிலைத்துவிட்டார்!
மனம்நிறைந்த இனசனம்
உறவாகும் நட்பு
காதல் கல்யாணம்
பிள்ளை குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியோடு குடித்தனம்
பிள்ளைகளின் படிப்பிலே
பெரிதான ஆர்வம்
அயராத உழைப்பு
தளப்பமிலா வருமானம்
ஒருவாறு அவர்வாழ்க்கை
விரைவாக வளர்கிறது!
உலகம் முழுவதுமே
தமிழன் தனிமுகம்
இப்போது தெரிகிறது!
எல்லா இடத்திலுமே
தனியான தமிழோசை
இப்போது கேட்கிறது!
தெரியும் முகமும்
கேட்கும் ஓசையும்
அடுத்த அடுத்த
சந்ததிக்கு அப்புறமும்
அங்கெல்லாம் இருக்குமா?

**ஓம்சுக்கிலாம் பரதரம்**
**காசுகறப்பதே குறியாகி நிற்கிறது.**

புலம்பெயர்ந்து போனவர்கள்
நாலைந்து பேர்கூடி
சேர்ந்து கதைபேச
புதிதாக ஒருயோசனை
ஒருவனுக்கு வருகிறது!
"தென்னாடுடைய சிவனை
எந்நாளும் நாம்துதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ அருள்கிடைக்க
சைவம் நிலைத்திருக்க
இங்கே ஒருகோயில்...."

வாயிலிருந்து வார்த்தை
வந்து முடியுமுன்னர்-
ஓம்சுக்கிலாம் பரதரம்
ஓடிப்பறந்து பாய்ந்துகுதித்து
பேயாய்ப்பெருத்து நாயாய்க்குழைந்து
மகுடி வாசித்து
வசதியாய் இடம்பிடித்து
செத்தமொழி சொல்லி
படுகுழி பந்தல்போட்டு
பட்டோலை காட்டி
'அந்நியம்' வளர்க்க
அந்நியச் செலாவணியில்
அநியாய விலைசொல்லி
விருப்பமெல்லாம் நிறைவேற்ற
பெரிதாகப் பறையறைந்து
பூசைகள் பலசெய்து
காசுகறந்து களிகொண்டு
கூத்தாடி நிற்கிறது!

**முட்டாள்தனத்தைக் கட்டியழும்**
**அவலநிலையேதொடர்கிறது!**

புதியஇடம் புதியசூழல்!
வளமானபுது வாய்ப்புக்கள்!
வான்வரை வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராவிருந்தாய் வந்துநிற்கும்
பெருமான உணர்வுகள்!
எத்தரைத் தூரவைக்க
மெத்தவே பொருத்தமான
சுத்தமான சூழ்நிலை!

அத்தனையும் வாய்த்தும்-
அர்த்தமில்லாச் செத்தமொழிப்
பிதற்றல் விடுத்தொழித்து
நாறும் நடைமுறை
எடுத்துக் குழிபுதைத்து-

வழிபாடும் பூசையும்
வாழும் தமிழிலே
வளமாக நடத்தவும்
வரைவிலா நலம்பல
நல்வினையாய் பெருக்கவும் -

தமிழொடு சைவம்
வீறுடன் எழுந்து
விரைந்து வளர்ந்து
உலகம் முழுவதுமே
வழிவழி செழிக்கவும்-

வாய்ப்புக்கள் பலவந்தும்-

பலம்கெடுத்துப் பிணித்துநிற்கும்
பாழான மனவடிவமைத்தனம்
மாறாத காரணத்தால்-

முடமான வழக்கையும்
முட்டாள் தனத்தையும்
கட்டியழும் அவலநிலையே
'கடைமை'யாய் தொடர்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாக்கி அரித்துக்**
**கெடுக்கும் பெருநோய்**

“நோய்நாடி நோய்முதல்நாடி
அதுதணிக்கும் வாய்நாடி
வாய்ப்பச் செயல்“
தமிழும்சைவமும் வளர்ந்துசெழித்து
வாழ்ந்து சிறந்து
நலம்பலதருவதை நாடுவார்
வள்ளுவர் வாய்மொழி
அறிந்துதெளிந்து தெரிந்து
குடிஉயர உடனடியாய்
வழிசெய்ய வேண்டும்!
தமிழொடுசைவம் தாக்கிஅரித்து
கெடுத்துச்சிதைத்து அழிக்கும்
பெருநோய் எது?
நோய்மாற்றும் மருந்துஎன்ன?
பீடித்து நெடுநாளாய்
நீடித்து நின்று
தாக்கி அரித்துக்
கெடுக்கும் பெருநோய் -
படுகெட்ட கடைகெட்ட
பொய்யே நிறைந்த
பொல்லாத பிராமணமதம்!
முட்டாள்தனம் மூடத்தனம்
அயோக்கியத்தனம் சாதிவியாதி
சுரண்டல் பெருவெறி
இத்தனையின் மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமே பிராமணமதம!
இளைதாக முள்மரம்
கொல்லாத காரணத்தால்
காழ்த்துக் களையுநர்
கைகொல்லும் கொடியநிலை
விளைந்துளது!

**தமிழர் நமக்குத்**
**தரித்திரம் வேண்டாம்**

தவளைகள் கத்தும்சத்தம்
பக்திக்கு வித்துஆகாது!
பரகதிக்கும் உதவாது!
தவளைச் சத்தமே
ஈசன் உவக்கும்
தேவபாடை என்று
சொல்பவர் இருப்பின்
சொல்பவன் அயோக்கியன்!
கேட்பவன் முட்டாள்!
ஊன்நோக்கும் இன்பம்வேண்டி
உழலுவோர்க்கு
பொய்யெல்லாம் மெய்யென்று
நம்பவைத்துப்
பணம்பறிப்பார் படைக்கலமே
தேவபாடை!
தமிழை விரும்பாது
ஒதுக்கிப் புறந்தள்ளி
தாழ்த்தி மிதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமதித்து அழிக்கும்
சமயம் எதுஆயினும்
அதுதரித்திரம்! தமிழர்
நமக்குஅது வேண்டாம்!

**வேற்றுமை தெரியவேண்டும்!**

சைவம் வேறு!
பிராமணமதம் வேறு!
வேற்றுமை தெரிதலே
தமிழர்தம் முதல்வேலை!
செம்மைநிறை கூர்த்தமெய்
ஞானத்துக்கும் பொய்மைநிறை
செத்தமொழிக் கூத்துக்கும்
சத்தியமாய் ஒற்றுமை
ஒன்றுமே இல்லை!
சான்றவர் ஆய்ந்திடத்
தக்கவாம் பொருள்தெரிந்து
ஆன்றவிந்து அடங்கிய
கொள்கைச் சான்றோர்
வாழ்க்கை விளக்காக
வளர்த்தது சைவம்!
வருமானம் பெருக்குதற்கு
வழியுளது என்றுசொல்லி
சாராயக் கடையிலும்
சாந்தியும் பூசையும்
செய்துவைத்து வருமானம்
தேடுவது பிராமணமதம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பியும் சவரும்
நிறைந்த குப்பையிலே
மறைந்து கிடக்கும்
நல்ல தனிவிதையை
மெல்லத் தனியாக்கி
நல்லபயன் கொள்வதுபோல்-
பிராமண மதமெனும்
பிராகிருத பித்த
அசைவத்தின் நீக்கியே
உய்திதரும் உயர்வான
சைவத்தின் மெய்யான
பயன்கொள்ளல் வேண்டும்!
நல்ல தமிழோடு
சைவமும் சீராகி
தெய்வ அருள்சுரந்து
வையகம் துயர்தீர
மெய்யாக இதுஒன்றே
மருந்தாகும் நல்லவழி!

**நோய் மாற்றும்**
**மருந்து என்ன?**

பீடித்து நெடுநாளாய் நீடித்து நின்று
தாக்கி அரித்துக் கெடுக்கும் பெருநோய்
தெளிவாகத் தெரிகிறது!
நோய்மாற்றும் அமிழ்தான
அருந்தவ மருந்துஎன்ன?
செத்தமொழிச் சொதப்பல்
அத்தனையும் அழுகல்பெருநோய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலே வராதமொழி
பேய்குரைக்க நாய்கேட்க
தாயனைய தமிழ்சாக
கோயில்கள் அந்நியமாக
சைவம்சீர் சிதைகிறது!

செத்தமொழிச் சொதப்பல்
அத்தனையும் படுகெடுதி!
தப்பாகச் சொன்னால்
வருவது பெருமோசம்!
தப்பானவர் சொன்னால்
வருவது பெருநாசம்!

சடங்குகள் பூசைகள்
அத்தனையும் சுத்தமாய்
உடனே தமிழாக
எல்லாப் பெருநோய்க்கும்
அதுவே மருந்தாகும்!

மூத்த பொய்ம்மைகளை
அழிப்போம்! மூடக்
கட்டுகளைத் தகர்ப்போம்!
செத்த மொழியே
தேவ பாடையெனும்
அடாத கொள்கையை
ஓடஓட அடிப்போம

**புலம்பெயர்ந்தோர் இடங்களிலே**
**புதுவடிவம் எடுத்துவிட்டார்.**

வடையோடு மோதகம்
வாசனைப் பிரசாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாரி தட்சனை
செத்தமொழிச் சொதப்பல்
இத்தோடு முடிவதல்ல
பூசையும் வழிபாடும்!
இத்தோடு முடிந்தால்
அதுசைவ நெறியல்ல!
என்னஒரு கேவலம்
நடைமுறையில் வந்துள்ளது
சிந்தித்துப் பாருங்கள்!-
இங்கே இருந்து
வந்ததொழில் எல்லாம்
வரும்படிக்காய்ச் செய்தவர்கள் -
அச்சகக் கிளாக்கர்
எழுத்துக் கோத்தவர்
தட்டெழுத்து அடித்தவர்
தோசைக்கடை காசியர்
காவடித் தாளக்காரர்
மில்லிலேபில் எழுதியவர்
மடப்பள்ளி உதவி
நகைக்கடைச் சிப்பந்தி
துணிக்கடைப் பணியாள்
பெட்டிச எழுத்தர்
புத்தகம் விற்றவர்
சாத்துப்படிச் சோடனையார்
பென்சன் எடுத்த
பெருத்த தொந்திகள்
வரும்படி இல்லையென்று
பூசைத்தொழில் விட்டவர்கள்
எல்லாருமே-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப் பிறபொன்றே
சான்றிதழாகத் தாங்கி -
தாங்காத மனஅரிப்பு
மயக்கும் வெறியாக
பெருத்த வருமானம்
பெறுகின்ற விருப்பத்தால்-
மடப்பள்ளிக் கெட்டித்தனமும்
கடைச்சரக்கு மந்திரமும்
சாதிகுலம் பிறப்பில்லாச்
சங்கரனைப் பூசைசெய்ய
தனிச்சாதி தேவையென்று
காட்டுகின்ற தந்திரமாய்
மாட்டிய முப்புரிநூலும்
முறையான சோடனையும்
போட்டுக்கழற்றும் கோலமும்
கோத்திரப் பெயரும்
கோமளப் பூச்சும்
சாத்திரச் சங்கதிகள்
சரிக்கட்டும் சவடால்பேச்சும்
பெருத்த துணையாக
புலம்பெயர்ந்தோர் இடங்களிலே
புதுவடிவம் எடுத்துவிட்டார்!
பூசாரி ஆகியங்கே
பூசைகள் செய்கின்றார்!
ஆசைப்பசி வளர்த்துப் பித்தாக்கி
பித்தாக்கிய அத்தனையும் காசாக்கும்
வித்தை விளையாட்டுக் காட்டுகிறார்!
ஒரேஒரு முறைகூட
திருமுறைகள் ஒன்றேனும்
கருத்தறிந்து படியாதார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த சாத்திரங்கள்
பெயர்கூடத் தெரியாதார்
மதகுருக்கள் ஆகியங்கே
மந்திரங்கள் சொல்லுகிறார்!
இங்கென்ன வாழ்கிறதாம்?
எங்குமேநிலைமை இதுவேதான்!

**காத்து வளர்ப்பது**
**எப்படி?**

புலம்பெயர்ந்த நம்மவர்
பலரின் வாழ்க்கையிலே
இப்போதுஎன்ன நடக்கிறது?
தொடரும் அவர்சந்ததிகள்
தமிழோடு உறவாட
தெய்வ அருள்சுரக்கும்
சைவ நெறிநிற்க
நல்லவழி ஏதேனும்
அங்கே இருக்கிறதா?
இங்கிருந்து சென்றதமிழ்
சென்ற இடத்திலெல்லாம்
தொடர்ந்து கொடிவிட்டுப்
படர இடமுண்டா?
இடையிலே கருகி
முழுவதுமே மடிந்துவிடும்
அறிகுறிகள் தெரிகிறதா?
நாற்றுப் பயிராக
நிற்கின்ற நந்தமிழைக்
காத்து வளர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் களிகூர
ஊற்றுப் பெருக்காக்கி
உண்ணத் திகட்டாத
தித்திக்கும் தேனாக
உலகமெலாம் உலவவிட
நல்லவழி ஏதேனும்
நம்மிடையே இருக்கிறதா?

**ஆவது அறியாத்தன்மையினால்**
**அழகுதமிழின் எதிர்காலம்!**

ஆவது அறிவார்யார்?
அவரே அறிவுடையார்!
எதிரதாக் காக்கும்
அறிவினார் மட்டுமே
அதிரவருவதோர் நோயின்றி
அல்லல் எதுவரினும்
அதுநீக்கி நல்லதொரு
பெருவாழ்வு பெறமுடியும்!
புலம்பெயர்ந்தோர் இடங்களிலே
நடப்பதெல்லாம் பார்த்திருக்க
வயிறுபற்றி எரிகிறது!
வாழும்தமிழ் அங்கெல்லாம்
நெடுங்காலம் நிலைத்திருக்க
வழியேதும் இருப்பதாக
ஒருசிறிதும் தெரியவில்லை!
ஆவதுஅறியாத் தன்மையினால்
அழகுதமிழின் எதிர்காலம்
அழிவைநோக்கி நிற்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொச்சைத்தமிழும்**
**அங்கே இருக்காது.**

புலம்பெயர்ந்தோர் இடங்களிலே
பிள்ளைகளின் படிப்பு
தமிழிலே இல்லை!
அந்நாட்டு மொழிஎதுவோ
அதுவேஅவர் கல்விமொழி!
குறைசொல்ல முடியாது
பிழையொன்றும் இதிலில்லை!
பள்ளிமொழி படிப்புமொழி
கல்விமொழி எதுவோ
அதுவே அவருடைய
வாயிலே இயல்பாக
வருகின்ற பேச்சுமொழி!
ஒருவரோடு ஒருவர்அவர் பேசுகையில்
ஒருசொட்டுத் தமிழுக்கும் இடமில்லை!
தாயோடு தந்தை
அவரோடு உறவாட
கொச்சைத்தமிழ் கொஞ்சம்
கொஞ்ச வருகிறது!
கொஞ்சி மகிழ
முன்னைப்பெருமை சொல்லிமகிழ
அள்ளி அணைக்க
அவருக்கு அதுபோதும்!
பொதுவான நிலைமை
அங்கெல்லாம் இதுவேதான்!
அடுத்தஅடுத்த சந்ததி
வீட்டிலே புழங்குவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் குழைக்கும்
தமிழாக இருக்காது!
கொஞ்சி மகிழ்ந்திடவும்
கூடிக் குலாவிடவும்
கொச்சைத் தமிழும்
அங்கே இருக்காது!

**வழிபாட்டு மொழியாக**
**வண்ணத்தமிழ் இருந்திருந்தால்**

பள்ளியிலே தமிழ்இல்லை!
வீட்டிலே தமிழ்புழங்காது!
வழிபாடு பூசை
என்பதிலும் தமிழ்கிடையாது!
வரவிருக்கும் பரம்பரைக்கு
தமிழோடு உறவாட
ஒருவழியும் இருக்காது!
அடுத்தஅடுத்த சந்ததியின்
வாயிலே வழக்கறிந்து
வாழும்தமிழ் வருவதற்கு
வாய்ப்பே கிடையாது!
கோயில்கள் எங்஦ணுமே
பூசைகள் எல்லாமே
தாயனைய தண்ணார்
தமிழிலே நடைபெறும்
நல்லதொரு வழக்கம்
நடைமுறையில் இருந்திருந்தால்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு மொழியாக
வண்ணத்தமிழ் வாழ்ந்து
வம்ச வழியாக
சந்ததி சந்ததியாக
வந்துவந்து வேர்விட்டு
உலகம் முழுவதுமே
பரந்துயர்ந்து நிலைத்திருக்கும்!

**தெய்வக் கொடையாக**
**வாய்ப்பு வந்தது.**

"தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்"
என்ற எழுச்சிக்கவி
புரட்கிக்கவி பாரதியின்
எண்ணம் நிறைவேற -
எப்படியோ ஒருவாய்ப்பு
தெய்வக் கொடையாக
தேடி அலையாமல்
வந்து வாய்த்தது!
என்ன செய்வது?
எங்கே போனாலும்-
தமிழோடு சைவம்
அடியோடு கெடுத்துத்
தொலைத்துக் குடிகெடுக்க
வந்து நிற்கிறதே-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகெட்ட கடைகெட்ட
பொய்யே நிறைந்த
பொல்லாத பிராமணமதம்!

கழுதைகள் கத்துவதும்
குதிரைகள் கனைப்பதும்
கோட்டான்கள் அலறுவதும்
எந்தவழி பார்த்தாலும்
மந்திரங்களே அல்ல!

வான்திரியினும் தாம்திரியா
மலையினும் பெரிதான
நிலையுடையார் நிறைமொழிகளே
மறைகளாகும் மந்திரங்கள்!

பேரானதமிழ் மானம்கெடுத்து
ஆதாயமே பெரிதாகி
பேதம் வளர்த்து
பேதைமையும் வளர்த்து
புழுவரித்த செத்தமொழியே
தேவபாடை என்றுசொல்லும்
படுகெட்ட கடைகெட்ட
பொய்யே நிறைந்த
பொல்லாத பிராமணமதமே-

தமிழ்ச்சாதி தன்மதிகெட்டு
மானம்விட்டு தன்மொழிவிட்டு
பொய்மையாகிப் புழுவெனமடிய
பெரிதான முதற்காரணம்!

எச்சில்இலைக்கு வாலாட்டும்
நாய்கள் குரைக்கும்!
குரைப்பெல்லாம் பூசைமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாது! நல்லதமிழ்
நால்வர்தமிழ் தெரிந்தார்
நாய்க்குரைப்பைச் சகிக்கார்!

**புழுத்து அழுகிநாறும்**
**நிலையே தொடர்கிறது**

புலம்பெயர்ந்து உலகம்
முழுவதுமே பரவி
நிலைத்துவாழும் நமது
உறவுக்களைப் பார்த்து-
"வருமானம் தேடி
வாழ்கின்ற நீவிர்
பெருமானம் பேணி
இருக்க முடியாதா?"
என்றுகேட்கும் நிலையிலா
நாம்இங்கே இருக்கிறோம்?
மனவடிமைப் பட்டு
மயங்கி மதிகெட்டு
மானம்விட்ட வாழ்க்கை
நடத்துகின்ற நமக்கு
கேட்க முறையேது?
தப்பு நிச்சயமாய்
அங்கல்ல! நாம்காட்டிய
வழியில்தானே வழிபாடு
பூசைஅங்கே நடக்கிறது!
"தமிழ்""தமிழ்" 'நமதுஉயிரே
தமிழ்'என்று எழுதுகிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையிலே முழங்குகிறோம்!
ஊடகங்கள் பலவற்றில்
தமிழ்ப்பெருமை பறைசாற்றுகிறோம்!
"உயிர்தமிழுக்கு உடல்மண்ணுக்கு"
"விண்ணவர் விருந்து
அமிழ்தம் என்றாலும்
நமக்குஅது வேண்டாம்!
தமிழுக்கு அதுநிகரில்லை!"
என்றெல்லாம் அளக்கிறோம்!
எல்லா இடத்திலுமே
எங்கள் அரசியலின்
உயிர்நாடி தமிழேதான்!
ஆட்சியில் அரசில்
தமிழுரிமை கோருகிறோம்!
தமிழுக்காக தியாகம்
எதுசெய்யவும் தயாராக
இருப்பதாகவே சொல்லுகிறோம்!
ஆனால்-
சடங்கென்றும் பூசையென்றும்
வந்தவுடன் புழுவரித்த
சடமான செத்தமொழி
மந்திரமாய் உடன்வந்து
பிராமணமத மாயைவலையுள்
மயக்கிஇழுத்து விழுத்த
புழுத்து அழுகிநாறும்
நிலையே தொடர்கிறது!

**என்னஒரு கூடசவைக்கும்**
**சின்னத்தனம்!**

'தமிழ்'என்று சொன்னவுடன்
துள்ளிஎழுந்து ஆர்ப்பரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிநிற்பது எங்கள்குணம்!
தமிழுக்காக உணர்வோடு
உயிர்தரவும் நாங்கள்
எப்போதும் ஆயத்தம்!
அப்படி இருந்தபோதும்-
எங்கள்தமிழின் தனிச்சிறப்பான
சங்க இலக்கியங்கள்
உலகமே புகழ்ந்துபோற்றும்
பொய்யாமொழி திருக்குறள்
உய்திதர மெய்யான
தெய்வநெறி சொல்லும்
உயர்சைவத் திருமுறைகள்
அருள்நிறைந்த மருந்தாகும்
சித்தாந்த சாத்திரங்கள்
என்றின்ன நல்லபல
நமதுமுது சொத்துக்கள்
கருத்தறிந்து படித்துப்
பயன்கொள்ளாக் காரணத்தால்-
தனக்கும் இனத்துக்கும்
பெரிதான கேடுதரும்
மட்டில்லா மனவடிமைத்தனம்
மலையளவாய் வளர்ந்து
தளையாகப் பிணித்து
இறுக்கிநிற்கும் காரணத்தால்-
உயிரான தமிழைத்
“தீண்டாத மொழி”யாக்கி
ஒதுக்கி வைத்துக்
கேவலப் படுத்திஅதன்
அழிவுக்கும் இழிவுக்கும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமை நிறைந்து
கண்மூடிக் கருத்திழந்து
நாமே காரணராகி
காயடித்த காளைகளாய்
களையிழந்து நிற்கின்றோம்!
உள்வீட்டுச் சடங்கிலும்
உணர்வான தமிழில்லை!
ஊர்க்கோயில் பூசையிலும்
உயிரான தமிழில்லை!
இல்லையென்ற கவலையும்
எள்ளளவும் நமக்கில்லை!
மானம்விட்ட சொரணைகெட்ட
மனவடிமைப் பட்டநமக்கு
பெருத்ததொரு அவமானமாக
இதுதெரியவும் இல்லை!
பேசுவது பேசரிய
சுத்தத்தமிழ்ப் பெருமானம்!
பேணுவது பூசையிலே
செத்தமொழி அவமானம்!
நன்றுநன்று! மெத்தவேநன்று
நமதுதமிழ் அபிமானம்!
என்னஒரு கேவலமான
கூசவைக்கும் சின்னத்தனம்!
வெட்கமின்றி மானமின்றி
இனஉணர்வும் மொழிஉணர்வும்
முழுவதுமே இழந்து
உய்திதரும் உயர்வான
சைவ நெறிவிலகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழனென்றும் சைவனென்றும்
பெயரளவில் பேசுவதில்
பெருமையென்ன இருக்கிறது!
காசுக்கே பூசைசெய்யும்
கடைகெட்ட கீழ்களும்
ஆசைக்கே அடிமையாய்
அவைபின்னே இழுபடும்
கீழ்களிற் கீழ்களும்
எதுஎதுவோ செய்துசெய்து
எல்லாமே கெடுக்கின்றார்!
சமயம்என்று வரும்போது
கீழ்களின் ஆட்சியே
திமிரோடு பெரிதாகக்
கொடிகட்டிப் பறக்கிறது!
தெய்வ ஒளிநிறைந்த
சைவ நெறியையும்
தேர்ச்சித்துணையாம் தமிழையும்
கீழ்களும் கீழ்களிற்கீழ்களும்
கீழே போட்டுமிதிக்க
வாட்டமின்றி வருத்தமின்றிப்
பார்த்திருப்போர் பதியிலார்
வழிவந்த மதிப்பிலா
இருமனப் பெண்டிருக்கே
ஒப்பு ஆவார்!

**புளியோ தரையா**
**பூந்தி உருண்டையா?**

தமிழுக்கே தனிப்பெருமை!
தத்துவ உலகிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஒத்தது
என்று சொல்ல
ஒன்றுஇல்லாத பெருஞ்சிறப்பு!
அறிவின் உச்சம்!
அறிஞர்க்குப் பெருவிருந்து!
சைவ சித்தாந்தம்!-
அதுஎன்ன புதுச்சரக்கு?
புளியோ தரையா
பூந்தி உருண்டையா?
என்றுகேட்கும் இழிநிலை
இன்றுஇங்கே வந்துளது!
தமிழின் தனிப்பெருமை
சைவத்தின் பெருஞ்சிறப்பு
குருக்களுக்கே தெரியவில்லை!
சைவத்தின் உயர்பெருமை
அரிச்சுவடி அளவேனும்
ஒருசிறிதும் தெரியாதோரே
வருவாயே குறியாகி
வாய்ச்சவடாலே குணமாகி
தெய்வப் பூசைசெய்ய
வந்து தொலைக்கிறார்!
இளிவந்த இந்தநிலை
இன்னும்தொடர விடலாமா?

**மருந்தாய் உதவும்**
**தவமான செயல்!**

தமிழும் சைவமும்
அழியாது இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாது இருக்க
நின்று நிலைபெற
உலகம் முழுவதுமே
நிலைத்து வளம்சுரக்க
சுரக்கும் வளத்தால்
மக்கள் உளம்உயர
உளஉயர்வால் வாழ்வுஉயர
உற்றநோய் தீர்க்கும்
மருந்தாய் உதவும்
தவமான செயல்என்ன?
கோயில்கள் எங்குமே
பூசைகள் எல்லாமே
உடனே தமிழாக்கல்!

**சீறிஎழும் ஆண்மை**
**வரவேண்டும்!**

சைவம் வீறுடன்எழுந்து
விரைந்துசெழித்து நன்குநிலைத்து
நல்லதுசெய்ய நாமமது
தமிழரெனச் சைவரெனக்
கொண்டநாம் நடுக்கமின்றி
நலமேவிரும்பி உலகெலாம்மகிழ
என்னசெய்ய வேண்டும்?-
செத்தமொழியைக் கண்டால்
சீறி எழுந்து
உதைக்கும் உணர்வு
நமக்கு வரவேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துத் துரத்தும்
ஆண்மை வரவேண்டும்!

**தமிழைப் படைக்க**
**எல்லாமே கிடைக்கும்!**

உயர்வான சிறப்புடைய
இன்பத்தமிழ்! இசைமிக்கதமிழ்!
உய்திதரும்தமிழ்! வாழ்க்கை
உரமாகும்தமிழ்! வாழும்தமிழ்!
பொய்யடிமை ஆக்காத்தமிழ்!
பக்திப் பனுவல்கள்
பல்லாயிரம் படைத்ததமிழ்!
மெய்ம்மை தரும்தமிழ்!
பழகப் பழகத்
தேனாகத் தித்திக்கும்தமிழ்!
பயிலப் பயில
இறைஅனுபவம் நிறைக்கும்தமிழ்!
ஞாலம்அளந்த மேன்மைத்தமிழ்!
உலகெலாம் பலபல
சந்ததியாய் நிலைத்துநின்று
நலமேதந்து புகழ்பரப்ப
விலைஎன்ன தந்தும்
செய்ய வேண்டியது
ஒன்றே ஒன்றுதான்!-
கோயில்கள் அனைத்திலுமே
தெய்வ அருட்தமிழைப்
பூசைமொழி ஆக்குவது!
பிராமண மதமெனும் படுகெட்ட கடைகெட்ட
பொய்யே நிறைந்த பொல்லாத பாதகச்சூது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிடு பொடியாகிச் சைவம் சிறக்கவும்
சரியான நெறிஇதுவே!

தெய்வப் பூசைக்குத்
தேடிக் கொண்டுவந்து
ஏதேதோ எல்லாம்
நிறையப் படைக்கின்றோம்!
நல்லது எல்லாம்
உயர்வானது எல்லாம்
கடவுளுக்குப் படைத்துப்
பூசைகள் நடக்கின்றன!
தமிழைவிட நல்லது
தமிழைவிட உயர்வானது
என்ன இருக்கிறது?

தொடையாக்கித் தமிழ்படைக்க
கடவுள் அருள்செய்ததே
நாயன்மார் வரலாறு!
'நம்மைச் சொற்றமிழ்
பாடுக' என்பதே
சுந்தரருக்கு கடவுள்
தந்த கட்டளை!
"செந்தமிழால் வைதாரையும்
வாழவைப்பான் முருகன்"
என்பது திருப்புகழ்
அருணகிரி அருள்மொழி

அப்புறம்ஏன் கோயில்
பூசைகளிலே தமிழ்ஒதுக்கல்?

"தெய்வத்துக்குத் தமிழைப் படைக்க
தமிழனுக்கு எல்லாமே கிடைக்கும்!"
திருமுறைகள் தந்த
ஞானியர் வாழ்க்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தது நடந்தது
கேட்டது கிடைத்தது!
கற்பனைக்கும் எட்டாத
அற்புதங்கள் நடந்தன!
தெய்வத்துக்குத் தமிழ்படைத்தே
அத்தனைநலமும் அவர்பெற்றார்!

**வந்து புகுந்தது**
**எப்படி?**

சந்தமாக வாயிலே
வந்ததெல்லாம் மந்திரங்களாக
எடுத்தும் படுத்தும்
கனைத்தும் கத்தியும்
பெரிதாக ஓலமிட்டு
மிருகங்கள் பலியிட்டு
இம்மைச்சுகம் ஒன்றேதேடி
தீவளர்த்து வேள்விசெய்து
காத்திருப்பதொன்றே ஆதியிலே
உருவான பிராமணமதம்!
கோயில்எடுத்தல் படிமம்வடித்தல்
நீராட்டல் பூச்சூட்டல்
போற்றிப் புகழ்ந்துமகிழ்ந்து
காதலாகிக் கண்ணீர்கசிந்து
முகமெலாம் கண்ணீர்நிறைந்து
அகமெலாம் குழைந்து
குழைந்த அன்பால்
கரமே குவித்து
ஆடலோடு அழகான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பாடல் பாடி
வழிபாடு செய்தல்
முந்தைத் தமிழர்
மரபிலே வந்த
மாசொன்றும் இல்லாத
முறையான பூசைநெறி!
குறையேதும் இல்லாத
நிறைவான தமிழ்நெறியிலே
முறைகெட்டுக் கறைபடிந்து
தாயனைய தமிழ்விடுத்து
தவளைச் சத்தங்கள்
இடையிலேவந்து புகுந்ததுஎப்படி?

**சிவம் தெரிந்து**
**வையகம் துயர்தீரும்!**

சிவமாக்கும் சைவத்தின்
கருவும்உருவும் வேரும்
விதையும்என விளங்கி
இனிதான இசைஒழுகும்
அழியாத தமிழாகி
உலைவிடத்து உய்திதந்து
வாழ்வை வளமாக்கி
வரைவிலா நலமே
தருகின்ற திருமுறைகளின்
பெருமைபோற்றிப் பேணாமையே
தமிழரெனச் சைவரெனப்
பேர்சொல்லிப் பேதையராய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுகின்ற நமது
தாழ்வுக்கும் அழிவுக்கும்
அறியாமைத் திமிருக்கும்
பெரிதான காரணமாகும்!
தாயனைய திருமுறைகள்
படித்தறிந்து மகிழ்ந்துபோற்றி
கோயில்கள் முழுவதுமே
தெய்வப் பூசைகளில்
பெருமையுடன்அவை பொலிந்துநிற்க
நின்றவினை நீங்கும்!
தமிழ்வளர்ந்து ஏற்றமுற்ற
வளமான வாழ்வால்
அருளான சிவம்தெரிந்து
அல்லல்எல்லாம் போய்த்தொலையும்!

**செந்தமிழும் சிவநெறியும்**
**சாகடிக்கும் நஞ்சு**

காலத்துக்குத் தோதாகத்
தாளித்த கற்பனையும்
கடலன்ன பொய்ம்மைகளும்
இடத்துக்கு இசைவான
வித்தகக் கதைபலவும்
ஆளுக்கு அளவான
சாத்திரச் சங்கதியும்
அரிக்கும் மனசுக்கும்
ஆசைப் பசிக்கும்
ஆசுநிறை தீனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசாமல் அள்ளித்தரும்
பொய்யும்புளுகும் அளந்துகொட்டி
செத்தமொழி சொதப்பிக்கொதப்பி
செப்பிடு வித்தைசெய்யும்
தந்திரத்தார் மந்திரங்கள்
செந்தமிழும் சிவநெறியும்
சாகடிக்கும் நஞ்சாகும்!
தமிழொடு சைவம்
முழுவதுமே கெட்டழிய
முறையல்லா முறைசெய்து
நெறியல்லா நெறிபற்றி
நாண்விடுத்து நாம்செய்யும்
பொல்லாப் பிழையறிந்து
சிந்தித்துப் தெளிந்துதேறி
செம்மைநலம் தேடிவர
தலைநிமிர்ந்து செம்மாந்துநாம்
நிற்பது எப்போது?

**செந்தமிழ் அருள்முத்துக்கள்**

சிந்தையைச் செம்மைசெய்யும்
சத்தான நல்லகதை!
பக்திநெறி வளர்க்கும்
முத்தான கருத்துக்கள்!
பலமான பலதத்துவங்களின்
தெளிவான விளக்கம்!
தத்துவ விளக்கங்களின்
தனிஉச்சமாய் சிறப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தத் தனிவிளக்கம்!
எல்லாமேதரும் கச்சியப்பர்
தந்ததமிழ் கந்தபுராணம்!
கவிச்சுவை தமிழ்சுவை
தனிவித்தகமாய் கலந்து
பக்திச்சுவை நனிசொட்ட
அருவியாய் தமிழ்ஒழுகும்
பரமன் துதியாகும்
அழகொளிரும் பெரியபுராணம்!
தேனாகத் தித்தித்து
அமிழ்து நிறைந்துஊறி
உள்ளொளி பெருக்கி
மனம்உருக்கும் திருவாசகம்!
சைவத்தின் உயிர்நாடி
மெய்யியல் கருவூலம்
பக்திப் பெருவெள்ளம்
தமிழ்விரகர் பெருங்குரவர்
சைவநலத் தனிக்குரவர்
தெய்வமணம் தமிழ்முழுதும்
நிறைந்து நிற்க
அமிழ்தாகத் தந்த
தமிழ்காத்த தேவாரங்கள்!
என்றின்ன பலநல்ல
சொந்த முதுசொத்துக்கள்
செந்தமிழ் அருள்முத்துக்கள்
அத்தனையும் ஒரேயடியாய்
ஒதுக்கிப் புறந்தள்ளி
மூலையிலே போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதுமே அழியவிட்டு
ஓம்சுக்கிலாம் பரதமல்லவா
தப்பும் தவறுமாக
ஓங்கிஇங்கே ஒலிக்கிறது!
தமிழுக்கும் சைவத்துக்கும்
வந்துள்ள இந்த அவலம்
தொடர விடலாமா?

அறிவு மழுங்கமழுங்க
பிராமணமதமே வளரும்!
பிராமணமதம் வளரவளர
அறிவு மழுங்கிஅழுகும்!

ஆசை மயக்கமும்
பிராமணமத மாயையும்
கண்ணை மறைக்க
விழலுக்கே நீர்வார்த்து
வீணருக்கே அடிமைசெய்து
வாழ்வை அவலம்ஆக்குவது
சைவ நெறியன்று!

**மாங்காய் விழாது**

மெல்லமெல்ல வந்துபுகுந்து
அமிழ்தாம் தமிழையும்
அறிவிலார் மதியையும்
மறுவிலா மருந்தான
சைவ நெறியையும்
அழித்துச் சிதைக்கும்
சூது தெரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமாய்ச் சேர்ந்து
கோவிந்தா போட்டு
சொரணை கெட்டு
செத்தமொழி மந்திரத்தால்
மாங்காய் விழுமென்று
மயங்கி நிற்பார்
செந்தமிழின் பெருமைதெரியார்!
செய்தபாவம் தெரியவிடாது!
பாவம் பெருத்தார்
விடாது தொடர்ந்து
கொடிறும் பேதையும்
கொண்டது விடாதெனும்
வழியே சென்று
அழிவே அடைவர்!

**தமிழ்சொல்லி வழிபட்டு**
**அற்புதங்கள் பல செய்தவர்!**

நற்றமிழ்வல்ல ஞான
சம்பந்தன் நாவினுக்கரையன்
ஆதியாம் சிவனருள்பெற்றுத்
தமிழ்தந்த சான்றோர்
அவம்பெருக்கும் புல்லறிவு
அடியோடு தொலைந்துபோகவும்
விடிவில்லா வழிசொன்ன
குறைமலிந்த புரைநெறிகள்
பாழ்பட்டு அழிந்துபோகவும்
தவம்மிகுந்து அருள்சுரந்து
தேன்சொட்டும் தமிழ்செய்தவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைஅருளின் வழிநின்று
தமிழ்சொல்லி வழிபட்டு
கற்பனைக்கும் எட்டாத
அற்புதங்கள் பலசெய்தவர்!

சங்கநெறி வழிவந்த
தமிழ்ப்புலமையிலே ஒப்பொன்றின்றி
உயர்ந்து நின்றவர்!
ஊர்ஊராக நடந்துநடந்து
தலமெல்லாம் தேடித்தேடி
தண்ணார்தமிழ் பாடிப்பாடி
செந்தமிழ்ப் பாட்டாலே
செம்மைச் சைவநெறி
நின்று நிலைத்திருக்க
நாட்டையே திருத்தித்தந்தவர்!

அருமந்த தமிழ்நெறியோடு
பொருந்தாத பொல்லாத
அரசையுமே மனம்மாற்றி
அன்போடு பேணும்முறையிலே
நிறைவாக நிற்கவைத்தவர்!

உரமும் ஊற்றும்
வழிவழி ஊட்டவல்ல
நிலைத்துவாழும் மந்திரங்களாக
செந்தமிழ்ப் பாடல்களை
ஆயிரக் கணக்கிலே
இசைநிறைய தமிழ்நிறைய
அழகொழுகப் பாடித்தந்தவர்!
இவர்கள் தந்த தேமதுரத் தமிழ்இருக்க
தேவார திருவாசகத் தீந்தமிழ் தேன்இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் மறையாத புகழுடைய மறைகளாக
அருமைத் திருமுறைகள் அத்தனையும் இருக்க
ஓம் சுக்கிலாம் பரதம்
சசிவர்ணம் சதுர்புசத்தை
நாம்ஏன் முட்டாள்தனமாக
கட்டி அழவேண்டும்!

**தேவா திருவாசகத்தை**
**விடமாட்டான்!**

அரிதுஅரிது! வரிசைதெரிதல்
அரிதினும் அரிது!
வரிசை தெரிந்தவன்
தேவ பாடையைத்
தொடமாட்டான்! தேவார
திருவாசகத்தை விடமாட்டான்!

**பெருவெள்ளமாய்**
**தமிழ் பாயவேண்டும்**

சைவத்தில் நிறைந்திருக்கும் புறஅழுக்கும்
படிந்திருக்கும் ஒட்டடையும் மிகஅதிகம்!
சைவத்துள் பெருவெள்ளமாய் தமிழ்பாய
புதிதாய்அது பெரிதாகப் பொலிவுபெறும்!

**சைவமும் தமிழும் ஒருபோதுமே**
**பிரிந்து நிற்கக்கூடாது.**

தமிழின் சுவையறியச்
சைவம் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் சிறப்பறியத்
தமிழே வேண்டும்!
தமிழின்றிச் சைவம்
தனித்து நில்லாது!
தமிழும் சைவமின்றித்
தழைக்க முடியாது!
தமிழும் சைவமும்
சேர்ந்தே நிற்க
உலகம் முழுவதுமே
புகழ்ந்து போற்றித்
தொழுது நிற்கும்!

**வரலாறு தந்துள்ள**
**தெளிவான தேற்றம்**

முன்னர் நடந்ததை
காலம் தந்துள்ள
தெளிவான பாடத்தை
என்றுமே மறவாதீர்! -
கன்னடமும் தெலுங்கும்
மலையாளமும் துளுவும்
இன்னும்இப்படி ஒருசிலவும்
தமிழிலிருந்து பிரிந்து
உருமாறி வேறாகி
வரிசை வரிசையாய்
புதிதாய் வந்து
பிறந்தது எப்படி?
தமிழுக்கே உரித்தான
தனிவீறும் சிறப்புமிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்தமிழாம் மணிப்பிரவாளம்
அரபுத்தமிழ் அம்மாமித்தமிழ்
வெறுமைநிறை வேதத்தமிழ்
வெருவந்த செய்துநிற்கும்
சத்தில்லாச் சாத்தான்தமிழ்
என்றின்ன பலதோன்றி
தொன்மைத்தமிழ் கெட்டழியக்
காரணம் என்ன?

சைவத்தை விட்டதமிழ் அழியும்!
பெரும்பாலும் வடிவம் மாறி
புதுமொழி உருவாகும்!

பணபலம் பக்கத்
துணையாக விளம்பரம்
பன்மொழித் தேர்ச்சி
மெத்தவே சேர்ந்த
வித்தகர் கெட்டித்தனம்
எல்லாமே சேர்ந்துநிற்க
மிசன்கள்சில வளர்க்கும்
முரணே நிறைந்த
வீரியமே இல்லாத
சாரமில்லாச் சாம்பார்மதம்!
சாதிபேதம் சாதித்துநிற்கும்
சங்கரமடம் வளர்க்கும்
மடமைநிறை கிரியைநிறை
புரளிநிறை விடமதம்!
வெறித்தனமாய் மதம்மாற்றி
உறவழித்து ஊர்கெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பில்லாச் சூதுமதம்!
ஊன்சுவையே பெரிதென்னும்
உதவாத தீனிமதம்!
தனிமதமாய் வைணவம்!
வேண்டாத நாத்திகம்!
படுகெட்ட கடைகெட்ட
பொய்யே நிறைந்த
பொல்லாத பிராமணமதம்!
இவையெல்லாம் தமிழ்தோன்றி
நிலைபெற்று ஆட்சிசெய்த
இந்நிலத்தில் குடிகொண்டு
தடிப்போடு திமிராடக்
காரணம் என்ன?

தமிழை விட்டசைவம் பிறழும்!
பெரும்பாலும் பொய்யே பெருக்கி
அறியாமை வளர்க்கும் பிராமணமதமாகும்!

தமிழுக்கும் சைவத்துக்கும்
உள்ள சம்பந்தம்
தனியான சம்பந்தம்!
சுத்தமான அத்துவிதம்!
அதுஇன்றி இதுஇல்லை
இதுஇன்றி அதுஇல்லை!
வரலாறு தந்துள்ள தெளிவான தேற்றம் -

சைவத்தை விட்டதமிழ் அழியும்!
புதுமொழி ஆகும்!
தமிழை விட்டசைவம் பிறழும்!
புறமதம் ஆகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரியாதமொழி மந்திரம்**
**பெரிதாகவே கெடுதிதரும்!**

மந்திரம்மந்திரம் என்கிறார்களே
இந்தமந்திரங்கள் பற்றிக்
கொஞ்சம் பார்ப்போமா? -
சந்தேகம் இல்லாமல்
ஒருவர் தப்பாமல்
சமயத்தார் எல்லாரும்
சத்தியமாய் சரியென்னும்
மந்திரங்கள் பற்றிய
பலமான உண்மை -
மந்திர சக்தியின்
சுத்த உயிர்நிலை
உத்தி நிறைந்த
உத்தம உச்சாடனம்!
அத்தோடு நித்த
நியமம் தப்பாத
சுத்தராம் உச்சரிப்பார்
சித்த சுத்தி!
உச்சரிப்புத் தப்பானால்
மந்திரம் வேறாகும்!
பல்லுப் போனாலே
சொல்லும் போய்விடும்!
பல்வலி வந்தாலும்
தப்பு வந்துவிடும்
உமிழ்நீர் நிறைந்தாலும்
உச்சரிப்புத் தப்பாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்சரம் பிசகின்
மந்திரம் மாறும்!
புரியாதமொழி மந்திரம்
தெரியாமலே உருமாறி
பெரிதாகவே கெடுதிதரும்!
"நின்பாத கமலத்தைப்
பூசிக்க வேண்டுகிறேன்"
என்பது "நின்பாதக
மலத்தைப் பூசிக்க
வேண்டுகிறேன்" என்றாகும்!
"மாதேவா! சம்போ!
கந்தா!" உருமாறி
"மாதே!வா! சம்போ
கம்தா!" என்றாகும்!
கவனித்துப் பாருங்கள்!
நடப்பது புரியும்
அடுத்த பூசைக்கு
ஆள்காத்து நின்றால்
மந்திரம் சுருங்கும்
பசையுள்ள பேர்வழி
யார்வந்து நின்றாலும்
மந்திரம் விரியும்!
பூசாரி வாசகம்
ஆசார மந்திரம்!
என்னவும் சொல்லலாம்
எப்படியும் சொல்லலாம்!
தப்பும் தெரியாது
தவறும் தெரியாது!
சுட்டிக் காட்டவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக் கேட்கவோ
யாரும் கிடையாது!
சொல்லும் பூசாரிக்கே
மொழியும் தெரியாது
பொருளும் புரியாது!

**எல்லையில்லா விபரீதவிளைவுகள் வந்துசேரும்!**

மந்திரங்கள் என்பவை
மகாசக்தி வாய்ந்தவை!
அப்படித்தான் சொல்கிறார்கள்
அப்படித்தான் நம்புகிறார்கள்!
சொல்லும் மந்திரம்
அட்சரம் பிசகாது
பிழையின்றிச் சொல்லவேண்டும்!
மந்திரம் சொல்பவருக்கும்
நியமங்கள் பலஉண்டு!
மந்திரம் தப்பானால்
வருவது மகாமோசம்!
நியமங்கள் தப்பியவர்
என்ன சொன்னாலும்
வருவது பெருநாசம்!
நியமங்கள் தப்பானால்
அச்சொட்டாய் சொன்னாலும்
ஒருசொட்டும் பயனில்லை!
நியமங்கள் தப்பானால்
எல்லாமே கோவிந்தா!
பொல்லாத ஆபத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியத் தேடிப்போய்
விலைகொடுத்து வாங்கும்
வம்பாக முடிந்துவிடும்!

கற்புடையபெண் என்றுசொன்னால்
எத்தனைவீதம் கற்புடையாள்
என்றகேள்விக்கு இடமில்லை!
நியமங்கள் என்றுசொன்னால்
எத்தனைவீதம் நியமம்உள்ளார்
என்றகேள்வி சுத்தஅபத்தம்!

நியமங்கள் உள்ளவர்
நியமங்கள் வழுவியர்
இரண்டுவகை மட்டுமேஉண்டு!

ஒருவீதம் அரைவீதம்
கால்வீதம் ஒருசொட்டு
இம்மியளவு வழுவினாலும்
சொல்லும்மந்திரம் அரோகராதான்!
வருவதுபெரிய பயங்கர
விபரீத விளைவேதான்!

நான்குமறை நன்றாக
அறிந்தோரும் அதற்குரிய
நியமங்கள் தப்பிநின்றால் -

இயம்பும் மந்திரங்கள்
பயங்கர வினையாகி
எந்தவிதம் இதுவந்ததென்று
சொல்லமுடியா இடர்தந்து
தொடராக விபரீத
விளைவுகளே தந்துநிற்கும்!

மந்திரம் தப்பானால்
வருவது மகாமோசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமங்கள் தப்பியவர்
என்ன சொன்னாலும்
வருவது பெருநாசம்!

தப்பாகவும் சொல்லக்கூடாது
தப்பானவரும் சொல்லக்கூடாது!

தப்பாகச் சொன்னாலும்
தப்பானவர் சொன்னாலும்
எதிர்பார்த்த விளைவுக்கு
அடியோடு எதிர்மாறாக
அதிரடியாய் எல்லையில்லா
விபரீத விளைவுகளே
தப்பாது வந்துசேரும்!
தொல்லைகளை விலைகொடுத்து
வாங்குவார் நிறையப்பேர்
இங்கே இருக்கின்றார்!

பொருத்தமான ஆசாரம்
ஒழுக்கசீலம் இல்லாத
பொய்யர்செய் பூசையாலே
உருவாகி வரும்பாவ
விபரீதம் பெரிதாகும்!
உருவாகும் பாவத்தில்
பெரும்பாகம் சூழ்ந்துவந்து
செய்விப்பார்க்கே உரித்தாகும்!
என்பதை நன்குதெரிந்தார்
தெள்ளுதமிழ் நெறிவிடுத்து
தேவார வழிவிடுத்து
பாழ்படுத்தி அழிவுதரும
செத்தமொழி வழிச்செல்லார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரழிவுகள் அடிக்கடி**
**வருவதன் காரணம்!**

களவும் கொலையும் அளவின்றி வளரவும்
பொய்யும் வழுவும் தோன்றி நிலைக்கவும்
முதிர்ந்த கன்னிகள் முதிரா மனங்கள்
அதிகம் பெருகவும் -
குடும்பச்சண்டை அயலவர்பிணக்கு
அடிதடியாகவும் -
தீரா வியாதிகள் தீர்வே இல்லாத
எயிட்சு என்பவை மக்களை வாட்டவும் -
காரணம் என்ன?
கோயில் பிரச்சினை கோடு ஏறவும்
யாகங்கள் பலநடந்த கோயில்கள்பல
பூசையே இல்லாது பூட்டியே கிடக்கவும்
காரணம் என்ன?
கும்பாபிஷேகம் நடந்த கோயிலிலே
கையோடு களவு நடக்கிறது!
ஊருக்கு உபதேசம் செய்துசெய்து
உயர்ந்துநின்று யாருக்கும் கிட்டாத
பேரோடும் புகழோடும் பவனிவந்த
சவிதாமந்திர சங்கராச் சாரியர்களே
அவமானப் பெரும்பழி சுமந்து
கொலைப்பழி சூடி
சல்லாபங்கள் சரித்திரமாக
சங்கடாச் சாரியர்களாகி
சிறையிலே சிக்குகிறார்கள்!
காரணம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்அழிவு இடப்பெயர்வு
கடும்வரட்சி வெள்ளப்பெருக்கு
இனக்கலவரம் தொற்றுநோய்ப்பெருக்கம்
மின்னாமல் முழங்காமல்
வந்துதாக்கும் சுனாமிஅனர்த்தம்
ஆதியாம் பென்னம்பெரிய பேரழிவுகள்
விடாது/தொடர்ந்து வருவதன்
காரணம் என்ன?
காரணம் இன்றிக்
காரியம் இல்லை!
தப்பாகச் சொன்னால்
வருவது பெருமோசம்
தப்பானவர் சொன்னால்
வருவது பெருநாசம்!
தப்பாகச் சொல்லுவதும்
தப்பானவர் சொல்லுவதுமே
பெருமளவில் எங்குமே
நடைமுறையில் இருக்கிறது!
நாப்பிழையாக வருவனவும்
தாம்பிழைக்கச் சொல்வனவும்
சூழல் முழுவதையும்
பெரிதாக மாசுறுத்தும்!
பிழைப்பே குறியானவையும்
பிழைக்குமேல் பிழையானவையும்
எல்லையின்றி வளர்ந்துநிற்க
பஞ்ச பூதங்களும்
பெரிதாகச் சினம்கொள்ளும்!
போலிகள் புகுந்தாலே
ஆபத்து வந்துவிடும்!
போலிகளே ஆட்சிஎன்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத கேடெல்லாம்
பெரிதாகத் தேடிவரச்
சொல்லவா வேண்டும்!

மந்திர பூசை
என்ற பெயராலே
மாசுற்ற சூழல் -

மனிதகுலம் முழுவதற்கும்
பழுதே செய்துநிற்கும்!
இல்லாத தொல்லைபல
சொல்லாமலே தேடிவரும்!
எல்லையில்லா அல்லல்பல
அழையாது வந்துநிற்கும்!

**தப்புவரக் கேடுவரும்**

எத்தனை பெரியமகா
வித்துவான் ஆயினும்
மந்திர பூசையிலே
தப்புவரும் சந்தர்ப்பம்
நிறையவே இருக்கிறது!
ஆனைக்கும் அடிசறுக்கும்!

சம்பந்தர் நாவரசர்
சுந்தரர் மணிவாசகர்
ஆதியாம் அருள்ஞானியர்
தமிழ்சொல்லி வழிபட்டு
கற்பனைக்கும் எட்டாத
அற்புதங்கள் பலசெய்தவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாற்றல் தெளிவாக
உலகுக்கு உணர்த்தியவர்!
மறைத்திறம் முறைப்பட
மிகநன்றாகவே அறிந்தவர்!
மந்திரவிரோதம் ஒருசிறிதேனும்
ஒருபோதுமே இல்லாதவர்!
மந்திர பூசையிலே
சிறியதொரு தவறேனும்
அறியாது வந்தாலும்
பெரிதான விபரீத
விளைவுகள் நிறையவே
வந்துசேரும் என்பதை
தெளிவாகவே தெரிந்தவர்!
தெரிந்த காரணத்தால் -
தமிழ்சொல்லி வழிபாடு செய்யுங்கள்
என்றே ஆணைதந்து சென்றார்!
தெய்வப்பூசை என்பது
கேலி விளையாட்டுமல்ல
வயிறுவளர்க்கும் வழியுமல்ல!
நடைமுறையில் உள்ள
செத்தமொழிப் பூசைமுறை
தொடரத் தொடர
விபரீத விளைவுகள்
தப்பாது உருவாகி
பெரிதாகவே கேடுவரும்!
செத்தமொழி மந்திரம்
மூதேவி வாலாயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தான் தந்திரம்
தரித்திர வித்து!
தமிழை அழிக்கும்
சைவத்தைச் சிதைக்கும்!
வீட்டுக்கும் ஆகாது
கோயிலுக்கும் கூடாது!
நித்தம் அதுகேட்கத்
தப்பாது கெடுதிவரும்!

**தமிழும் சைவமும் ஆவதும் அழிவதும் நமது கையில்!**

"குவலயத்தின் விழி"என்றான்
நமதுயாழ்ப் பாணத்தை
தமிழறிந்த பாரதி!
சத்தியமாய் அதுஉண்மை!
சைவமும் தமிழும்
ஆவதும் அழிவதும்
நமது கையில்!
யாழ்ப்பாணத் தமிழ்மகனே!
சுத்தத்தமிழ் தெரிந்ததனால்
சைவம் தெரிந்துநிற்கும்
தமிழ்ச்சைவப் பெருமகனே!
தமிழொடுசைவம் காக்க
என்னநீ செய்யப்போகிறாய்?
வாயால் கிணறுவெட்ட
யாராலும் முடியாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது முன்னோர்
தமிழின் பெருமையும்
சைவத்தின் சிறப்பும்
நன்கு அறிந்தவர்!

அறிவைப் புரந்தந்து
வாழ்வைப் பீடுற
உயர்த்தும் ஆற்றல்
தமிழுக்கும் சைவத்துக்கும்
உண்டென நம்பியவர்!

தமிழொடு சைவம்
காத்து நின்றவர்!
அந்நிய வெள்ளையன்
ஆண்ட காலத்திலேயே -
ஆட்சி மொழியாக
வேற்றுப் புறமொழியும்
அதிகார ஆணவத்தில்
நிறவெறி வெள்ளைத்தோலும்
திமிராடிய காலத்திலேயே -
மதிகெட்ட மாக்கள்
சூது மனத்தோடும்
சூழ்ச்சித் திறனோடும்
மதம்மாற்றும் வெறிகொண்டு
பேதம் வளர்த்துப்
பாரிய சேதம்
விளைத்த காலத்திலேயே -

சம்பந்தர் நாவரசர்
சுந்தரர் மணிவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்கண்டார் ஆதியாம்
தெய்வ அருள்மிகுந்த
பொய்யடிமை இல்லாத
எல்லையில்லாப் புகழுடையார்
காட்டிய நெறியும்
நாட்டிய மரபுகளும்
மங்காது நின்றுநிலைபெற -
அன்னவர் பெயர்களிலே
பள்ளிகள் பலகட்டி
பரம்பரை நலம்பெற
உயிராகும் சந்ததிக்கு
உரமாக ஊட்டம்தர
உயர்ந்த சான்றோராய்
ஆக்கி வைக்கும்
அருள்ஞானக் கல்விதந்தவர்!
சைவப் பிரகாச
வித்தியா சாலைகளை
தெய்வத் தொண்டாக
ஊர்தோறும் உருவாக்கி
உலகம்உவக்க வளர்த்தவர்!
சைவச் சான்றோர்கள்
செந்தமிழ்ப் புலவர்கள்
ஆகியோரை எல்லாம்
வீடு வீடாகத்
தேடித்தேடிப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழும் சைவமும்
கற்றுத் தெளிந்தவர்!
தெளிந்ததைச் சைவத்தமிழ்
தொண்டாக்கிக் களித்தவர்!
தண்ணார்தமிழ் வளர்க்க
தமிழ்நாட்டுக்கே பலவழிகளில்
வழிகாட்டி நின்றவர்!
அறிவுத் திறனாலும்
சிந்தனைத் தெளிவாலும்
செய்நேர்த்திச் சிறப்பாலும்
உலகமேபுகழ வாழ்ந்தவர்!
உற்சாகமான உழைப்பே
உயர்வுதரும்எனக் காட்டியவர்!
சாத்தான்மதம் சுழன்றடித்து
சூறாவளியாய் வந்துசூழ்ந்து
தொல்லைபல தந்தநேரத்திலே
சிந்தித்துஅவர் செய்தசாதனை
எத்தனைபெரியது தெரியுமா?
மடமைநிறை மதக்கொழுப்பும்
தடிப்பான ஆணவமும்
முடிவிலா முட்டாள்தனமும்
சிந்தையிலும் உடம்பிலும்
முழுவதுமே நிறைந்துநிற்க
பணத்தின் பலத்தோடும்
பலமான அரசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத் துணையோடும்
ஆளணி வசதிகள்
எடுபிடி ஏவல்கள்
பசுக்கொலைப் பாவங்கள்
சேர்ந்த திமிரோடு
சாத்தான் சமயம் -
கூர்த்த மெய்ஞ்ஞானம்
தெரிந்தஇத் தேசத்திற்கு
சித்தவிகாரக் கலக்கமே
குறியாக வந்துசேர்ந்தது!
செருக்கோடு புயலாகப் படையெடுத்த
சாத்தான் சமயத்தின்
சிறகைஒடித்து முதுகைவளைத்து
வலுவைக் கெடுத்தனர்
சித்தம் சிவமாகி நின்ற நமதுமுன்னோர்!
கோயில்கள் எங்குமே
பூசாரிகளை வைக்கவேண்டிய
இடத்திலே வைத்தவர்!
பூசாரிகளை மதகுரு ஆக்கிவைக்கும்
முட்டாள்தனத்தை மறந்தும்அவர் செய்ததில்லை!
கோயில்கள் எங்குமே
பூசாரி பூசைக்கு
மிகமிக மேலாக
பெரியபுராணம் கந்தபுராணம்
படித்தல் பயன்சொல்லல்
அவற்றின் பயன்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள் பெருமளவில்
பொருளறிந்து விரும்பிவிளங்கி
கரும்பாகச் சுவைத்தல்
என்பதற்கே முதன்மை
என்றுமே கொடுத்தவர்!

முள்மரம் இளைதாக
இருந்த காரணத்தால்
கொல்லாது விட்டவர்!

**மேன்மைச் சந்ததியிலே வந்து பிறந்த உனது கடமை**

இத்தகைய வியத்தகு
போர்க்குணம் நிறைந்த
நெறியின் விலகாத
சிறுமை தெரியாத
அறிவுடன் நற்செயல்
அற்புதமாகப் புரிந்த
பெருமை பேணிய
மேன்மைச் சந்ததியிலே
வந்துபிறந்த உனக்கு -

அறிவோடும் உணர்வோடும்
தமிழும் சைவமும்
காக்கும் பொறுப்பு
நிறையவே இருக்கிறது!
தயங்கி இருப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணமத மாயையிலே
மயங்கி இருப்பதும்
மெய்ஞ்ஞானம் தெரியாதார்
அஞ்ஞானச் செயலாகும்!

**புண்ணியச் செயல்களாம்!**

எழுக! துணிக!
முழுவதும் கெடுமுன்
நற்செயல் புரிக!
பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல!

அறிவைவிற்று அறத்தைக்கொன்று
தமதுவயிறு ஒன்றையே
வாழ்வித்துச் செய்வார்பூசை
யாருக்குஎன்ன பயன்தரமுடியும்!

செத்தமொழி தூக்கிவீசி
எறியப் படுவதும்
செந்தமிழ் பூசையிலே
ஏற்றம் பெறுவதும்
சிறிதளவும் பழுதுடைய
செயல்களே அல்ல!
புன்னெறி விலக்குதலும்
நன்னெறி ஒழுகுதலும்
புண்ணியச் செயல்களாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செந்தமிழ் அறிந்து**
**அறிவோடு வளரும்**

சூழ்ந்துள்ள சூதுநீக்கி
யாழ்ப்பாணம் முழுவதுமே
யாதேனும் ஒருவழியில் -
பூரியர் வழிஒழித்து
சழக்குநெறி சாகடித்து
'அந்நியம்' அடித்துவிரட்டி -
எழில்சிந்தும் எங்கள்கோயில்
பூசைகள் எல்லாமே
தெளிவான தமிழ்மொழியில்
அழகாகச் செய்வதற்கு
ஏற்றதொரு ஒழுங்கு
உடனடியாய் உருவானால்
உலகம் முழுவதுமே
பெரிதான மாற்றம்
தப்பாது வந்துசேரும்!
அடுத்த சந்ததி
எங்கே இருந்தாலும்
சொந்தத்தமிழ் மறவாது
நிறைவாக வாழும்!
செந்தமிழ் அறிந்து
அறிவோடு வளரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனவடிமைத்தனம் மாறிவிட்டால்**
**எல்லாமே தமிழாகும்!**

உயிரினும் பெரிதான
உய்திதரும் உயர்தமிழை
அரித்துக் கெடுத்துத்
தாக்கி அழிக்கும்
படுகெட்ட கடைகெட்ட
பொய்யே நிறைந்த
பொல்லாத பிராமணமதத்தை
தள்ளி உதைத்து
அடித்துத் துரத்திவிட்டு
தன்மானம் காத்து
எல்லாமே தமிழில்செய்து
தெய்வ அருள்பெருகி
தலைநிமிர வழிஇல்லையா?
நல்லதமிழ் தெரிந்து
நால்வர்தமிழ் படித்து
மனவடிமைத்தனம் மாறிவிட்டால்
நல்லதெல்லாம் தானேவரும்!
எல்லாமே தமிழாகும்!

**யாழ்ப்பாணம் கண்விழிக்க**
**வேண்டும்!**

யாழ்ப்பாணம் உடனடியாய்
உட்கோட்டம் விடுத்து
கண்விழித்துக் கட்டறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பான தமிழ்எடுத்து
கோயிலிலே குடியிருத்த
வழிசெய்ய வேண்டும்

நமது முட்டாள்தனம்
மூடத்தனம் தொலைந்தால்
உலகிலே தமிழ்வாழும்!

புலம்பெயர்ந்தோர் நிலமெல்லாம்
தமிழ்நிலைத்து நீடுவாழும்!

யாழ்ப்பாணம் முந்திவந்து
கண்விழித்து முரசறைந்தால்
ஈழம் முழுவதுமே
கண்விழித்து மனம்மகிழும்!
ஈழம் கண்விழித்தவுடன்
தமிழ்பேசும் நிலம்முழுவதுமே
மானஉணர்வு நிறையவரும்!
உலகம் முழுவதுமே
பெரிதான மாற்றம்
உடனே வரும்!

உலகம் முழுவதுமே
தமிழ்அழகாக உருவாகி
அமிழ்தாகப் பரவிநிற்கும்!

உய்திதரும் உயர்சைவநெறி
உலகெலாம் இன்பம்நிறைக்கும்!

இங்கிருந்து சென்றதமிழ்
சென்ற இடமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவின்றி வழிவழியாய்
சந்ததி சந்ததியாய்
அழகாக நிலைத்திருக்க
இதுஒன்றே நல்லவழி!

பழுதொன்றும் இல்லாத
பக்குவமான வேறுவழி
தக்கதாய் எதுவுமில்லை!

எமதுசைவக் கோயில்கள் எங்ஙனுமே
தெய்வவழிபாடும் பூசைகளும்
அத்தனையும் சுத்தமாய் தித்திக்கும்
தேன்தமிழில் அறிவோடு உருவாக்கி
அழகாக நடத்திவர -

01. கயிறுதிரித்து வயிறுவளர்க்கும்
சுத்த அயோக்கியரும்
செத்தமொழி மந்திரமும்
வினையாகக் கொண்டுவரும்
விபரீதவிளைவுகள்
அத்தனையும் போய்த்தொலையும்!

02. உலகம் முழுவதுமே
தமிழோடு சைவம்
வழிவழியாய் நிலைத்துநின்று
புகழோடு இன்பமும்
பெரிதாக நிறைத்துநிற்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமது பொறுப்பு**

இருபதாம் நூற்றாண்டின்
இணையற்ற பெரும்கவிஞன்
பாரதி! -
மிகப்பெரிய தீர்க்கதரிசி!
அதனால்தான் -
"குவலயத்தின் விழி" என்றான்
நமதுயாழ்ப் பாணத்தை!
உலகமெலாம் பரந்துநிற்கும்
நமது தமிழை
அங்கெல்லாம் நிலைத்திருக்கச்
செய்யும் ஆற்றல்
நம்மிடமே இருக்கிறது!
முதலடி எடுத்துவைக்கும்
பொறுப்பு நமக்கேஉரியது!
பயம்அறியாத சிந்தனையும்
பக்குவமான அறிவும்
பலமான தமிழ்உணர்வும்
சைவத்தெளிவு நலமும்
சேர்ந்து நிற்பின்
சத்தியமாய் இதுநிறைவேறும்!
உலகமெலாம் தேமதுரத் தமிழோசை
பரவுதலை விரும்பிநிற்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம்
விளங்குதலை விழைந்து நிற்பார்
பலசெய்யக் காமுறாது
தடையெல்லாம் உடைத்தெறிந்து
உடனடியாய் இதுஒன்றே செய்துநிற்க
எங்கள்கோயில் பூசைகள்
எல்லாமே தமிழாக
பாரதியின் பெருங்கனவு
உடனடியாய் நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஐப்பசியில் வெளிவந்து
விற்பனையில் சாதனை செய்த
"சாமிஜி"யின்
"இது இந்துமதம்"
மறு பதிப்பு
விரைவில் வெளிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்

## சாமிஜீ

80/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org